(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.73/2014 |
| Deposition Of Witness for | : | PW6 |
| Name | : | **Tmt.M.Latha Devi** |
| Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **13th March 2025.**

(எதிரி ஆஜர்.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது காரைக்குடியில் TAGEDCO(பகிர்மானம்) செயற் பொறியளாராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை போலிசார் என்னை விசாரிக்கும்போது நான் உதவி செயற்பொறியாளர் (பகிர்மானம்) மானாமதுரையில் பணிபுரிந்து வந்தேன்.

19.11.2011–ல் இவ்வழக்கு சம்பந்தமாக என்னிடம் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை அவர்கள் என்னிடம் சில ஆவணங்களை தபால் மூலம் கேட்டார். 21.11.2011 அன்று காவல் ஆய்வாளர் அவர்களுக்கு என்னிடம் காட்டப்படும் ஆவணங்களை நான் அனுப்பி வைத்தேன். அந்த ஆவணங்களானது Estimate Sanction copy, Work order copy, Current Register Extract Copy, Despatch Register Extract Copy, மின் இணைப்பு மற்றும் மின் துண்டிப்பு பதிவேட்டின் (Reconnection and Disconnection Register) Extract Copy, Tamil Nadu Electricity Distributionn Standards of Performance Regulation 2004 சான்றிட்ட நகல் ஆகியவற்றை அலுவலக சீல் வைத்து கையொப்பமிட்டு அனுப்பினேன். அந்த **கோப்பு முழுவதும் அ.த.சா.ஆ.22** ஆகும். அப்போது நான் செயற் பொறியாளர் பொறுப்பில் இருந்தேன்.

2. விரிவாக்க வேலைகள் செய்யும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ஊதியம் மின்வாரியத்திலிருந்து காசோலையாக வழங்கப்படும். விண்ணப்பதாரரிடம் பணம் பெற்று ஊதியம் வழங்கக்கூடாது. இந்த வழக்கு தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. என்னிடம் காட்டப்படும் அ.த,சா.ஆ–18 என்பது Requistion Letter for Materials–ன் படி 72 items அ.சா.2 முருகசாமியின் தொழிற்சாலைக்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக தேவைப்பட்ட தளவாடச் சாமான்கள் எதிரியால் கோரப்பட்டுள்ளது என்றால் 68 தளவாட சாமான்கள் எதிரியால் கோரப்பட்டுள்ளது. ஆனால் மின் வாரிய பண்டக சாலையிலிருந்து 17 தளவாட சாமான்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாக அ.த.சா.ஆ.18–ல் கண்டுள்ளது என்றால் 28 தளவாட சாமான்கள் வழங்கப்பட்டுள்ளது. செயற் பொறியாளர் Approve செய்தபடி எதிரிக்கு தளவாட சாமான்கள் அனைத்தும் வழங்கப்பட்டதா என்பது குறித்து மானாமதுரை மின்வாரிய பண்டக சாலையில் பராமரிக்கப்படும் பதிவேட்டைப் பார்த்தால்தான் எத்தனை தளவாட சாமான்கள் எதிரிக்கு வழங்கப்பட்டது என்பதும் எந்தெந்த தேதிகளில் தளவாட சாமான்கள் எதிரிக்கு வழங்கப்பட்டது என்பதும் தெரிய வரும் என்றால் சரிதான்.

2. எதிரி கோரியிருந்த தளவாட சாமான்கள் மின்சார வாரியத்தால் மட்டுமே வழங்கப்படுமா அல்லது வெளி மார்க்கெட்டிலிருந்து வாங்கலாமா என்றால் செயற்பொறியாளரின் பொறுப்பு என்பது Work order Approval

கொடுப்பது மட்டுமே, Material பண்டக சாலையில் சென்று எடுப்பது உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி மின்பொறியாளர் ஆகியோரது பொறுப்பாகும். எதிரி கோரியிருந்த தளவாட சாமான்கள் மின்சார வாரியத்தால் மட்டுமே வழங்கப்படுமா அல்லது வெளி மார்க்கெட்டிலிருந்து வாங்கலாமா என்றால் ஒரு சில சிறிய சாமான்கள் வெளி மார்க்கெட்டில் உதவி மின் பொறியாளர் வாங்கிக் கொள்ளலாம்.

3. அ.த.சா.ஆ.19 என்பது குதாபக்ஸ் என்பவர் கொடுத்த ஆட்சேபனை மனு என்றால் சரிதான். அப்படி ஒரு ஆட்சேபனை மனு வந்தால் அந்த மனு குறித்து விசாரணை செய்து முடிவெடுத்த பிறகே பணி தொடரப்பட வேண்டும் என்றால் ஒரு வார கால அவகாசத்திற்குள் உதவி மின்பொறியாளர் அந்த இடத்திற்கு சென்று பார்வையிட்டு, அந்த ஆட்சேபனை நியாயமானதா என்று பரிசீலனை செய்து, அதனடிப்படையில் முடிவு செய்து ஆட்சேபனை செய்பவரின் ஆவணங்களை கேட்டு பெற வேண்டும். அவ்வாறு அந்த நபர் ஆவணங்களை தரவில்லை என்றால் வேலையை தொடர்ந்து செய்யலாம். உதவி மின்பொறியாளர் என்ற முறையில் அந்த பிரச்சனைக்குரிய இடம் சம்பந்தமாக வருவாய் ஆவணங்கள் உதவி மின்பொறியாளர் வசம் இருக்காது என்றால் சரிதான்.

அந்த இடம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் வருவாய் துறை அதிகாரிகளான கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர் வசம் தான் இருக்கும் என்றால் சரிதான். அதனால் உதவி மின்பொறியாளர் பிரச்சனைக்குரிய இடத்தினை பார்வையிட்டபிறகு அந்த இடம் யாருக்கு பாத்தியப்பட்டது என்பது குறித்து சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையருக்கு நோட்டீஸ் அனுப்பி அவர்களை விசாரித்து அந்த இடம் யாருக்கு சொந்தம் என்று வருவாய் ஆவணங்கள் மூலம் தெரிந்து அந்த ஆவணங்களின் நகல்களை பெற்று இறுதியாக உதவி மின்பொறியாளர் முடிவு எடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

4. என்னை லஞ்ச ஒழிப்பு ஆய்வாளர் விசாரிக்கும் போது *"மேற்படி முருகசாமி கோரிய மின் இணைப்பு வேலைக்கான மின் கம்பங்கள் ஊன்றியபிறகு ஆட்சேபனை தெரிவித்து திரு.குதாபக்ஸ் என்பவர் மனு போட்டுள்ளார். அதனை தொடர்ந்து மானாமதுரை தாசில்தாரிடம் நான் கேட்டுக் கொண்டதின்பேரில் நில அளவர் மற்றும் கிராம நிர்வாக அலுவலரால் இடத்தை அளந்து பார்த்ததில் போல் ஊன்றப்பட்ட இடம் அரசு கண்மாய் புறம்போக்கு என்றும் இதற்கு ஆட்சேபனை தெரிவிக்க குதாபக்ஸாவிற்கு உரிமை இல்லை என தெரிய*

*வந்ததால் விரிவாக்க வேலையை முடித்து 23.11.2011–ம் தேதி மின் இணைப்பு கொடுக்கப்பட்டது"* என்று நான் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம், சாட்சி மீண்டும் சரியாக ஞாபகமில்லை என்று கூறுகிறார். ஆட்சேபனை தெரிவித்த இடத்தை நான் சென்று பார்த்தேனா என்றால் இல்லை. நான் தாசில்தாருக்கு இது தொடர்பாக எதுவும் கடிதம் அனுப்பினேனா என்றால் ஞாபகமில்லை. கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர் வந்து அந்த இடத்தை அளந்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, சாட்சி மீண்டும் சரியாக ஞாபகமில்லை என்று கூறுகிறார். உதவி மின்பொறியாளர் மேற்படி ஆட்சேபனை சம்பந்தமாக விசாரித்தாரா என்றால் நான் அன்றைய தினம் பொறுப்பில் மட்டும் தான் இருந்தேன், உதவி மின்பொறியாளர் விசாரித்தது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு தெரியாத சங்கதிகளை பொறுத்தும், எனக்கு சம்பந்தமில்லாத சங்கதிகளை பொறுத்தும் ஆய்வாளர் விசாரித்தபோது வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது தனக்கு அது பற்றி தெரியாது என்று தவறாக விளக்கம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. ஒப்பந்த தொழிலாளர்களுக்கான ஊதியத்தை சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரரிடமிருந்து பெற்று வழங்கக்கூடாது என்பதற்கு மின்

வாரியத்தில் எதாவது விதிமுறைகள் உள்ளதா என்றால் ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் உதவி மின்பொறியாளருக்கும் ஒப்பந்தம் உள்ள நிலையில் விண்ணப்பதாரரிடமிருந்து ஊதியம் பெற்று வழங்க கூடாது. அவ்வாறு எதாவது விதிமுறைகள் உள்ளதா என்றால் அந்த ஒப்பந்தத்திலேயே அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த ஒப்பந்தத்தை எப்போதாவது நான் பார்த்துள்ளேனா என்றால் நான் உதவி மின் பொறியாளர், உதவி செயற்பொறியாளராக இருந்த போது பார்த்திருக்கிறேன். ஒப்பந்த தொழிலாளர்கள் யாரும் முன்பணம் வாங்காமல் வேலை செய்வது இல்லை என்றால் அது தவறு. இந்த வழக்கில் அ.த.சா.ஆ 22 கோப்பை நான் கொடுத்ததைத் தவித வேறு எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.03.13 18:32:38 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.